**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் - 2017**

---

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை பல்கலைக்கழகத்தின் உப வேந்தருக்கு 2018 யூன் 12 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 227,574,903 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியபோதும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவை 03 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நியமத்தின் 87(இ) பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் சுட்டிக் காட்டப்பட்ட ரூபா 127,300,391 பெறுமதியான நடைபெறும் வேலை சம்பந்தமாக உடன்படிக்கைக்குள்ளான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் புலப்படுத்தப்படவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்படும் சகல மூலதனச் சொத்துக்களும் அவற்றின் பயன்தரு பாவனைக் காலத்தினுள் பிற்போட்ட வருமானமாகக் கணக்கிலிடப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கையின் கீழ்

இனங்காணப்பட்டிருந்தபோதும், மூலதன மானியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தினது மீளாய்வாண்டிற்கான தேய்மானமாக ரூபா 101,410,747 கணக்கிலிடப்பட்டிருந்தது. எனினும், இது பிற்போட்ட வருமானமாகக் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்கு நிதியேற்பாடு செய்யப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் இருபத்தோராவது நூற்றாண்டிற்காக உயர் கல்விச் செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உபகரணங்களதும் நன்கொடைப் புத்தகங்களதும் காலக் கழிவு முறையே ரூபா 1,404,609 மற்றும் ரூபா 8,016 என ரூபா 1,412,625 கூட்டுத் தொகையாக வேண்டுமாயினும், நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதி ரூபா 1,194,372 ஆகக் காட்டப்பட்டமையால் காலக் கழிவு ரூபா 218,253 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) உடன்படிக்கை மீறல் காரணமாக 3 பேராசிரியர்களிடமிருந்து மீளாய்வாண்டு முடிவில் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,483,168 கணக்கீட்டுக் குறிப்பின் மூலம் புலப்படுத்தப்படுவதற்குப் பதிலாக பெற வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு உடன்படிக்கை மீறல் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட பெற வேண்டிய மீதிகளின் அதிகரிப்பு ரூபா 3,322,477 ஆகியபோதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் அது ரூபா 3,294,054 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 28,423 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஊ) எதிர்வரும் ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் பொடுப்பனவு செய்யப்பட்ட எரிபொருள் செலவினப் படியாகிய ரூபா 122,790 மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) பல்கலைக்கழக அனுமதிக்கான மாற்று வழி அபிவிருத்திக் கட்டம் II செயற்திட்டத்தின் பொருட்டு மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,801,476 நிதிக் கூற்றுக்களில் நடைபெறும் வேலையாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு விலங்கின விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் பீடத்தின் கீழ் நடாத்தப்படும் பண்ணையில் உள்ள விலங்குகளது பெறுமதியாகிய ரூபா 221,889 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் எழுது கருவி வகைப் பொருட் கையிருப்புப் பெறுமதி ரூபா 6,161,546 ஆகியபோதும், பொருட் கணிப்பு அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 6,025,451 ஆகியமையால் ரூபா 136,095 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலையான வைப்பு முதலீடுகளின் கீழ் காட்டப்பட்ட உப வேந்தர் நிதியம் மற்றும் உடன்படிக்கை மீறல் நிதிய மீதி ரூபா 17,386,715 ஆகியபோதும், வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 17,532,859 ஆகியமையால் விளக்கமளிக்கப்படாத வேறுபாடாக ரூபா 146,144 அவதானிக்கப்பட்டது.

(இ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையான ஒவ்வொரு ஆண்டினதும் நிதிக் கூற்றுக்களுக்கமைய, பல்கலைக்கழகத்தால் சுவீகரிக்கப்பட்டதும் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டதுமான நிலையான சொத்துக்களது கிரயம் ரூபா 1,235,640,886 ஆகும். எவ்வாறாயினும், நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 2,126,052,816 ஆகும். இதனால் அவதானிக்கபட்ட வித்தியாசம் ரூபா 890,411,930 ஆகும்.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கீட்டு விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ வழங்கல் | 311,274 | கையிருப்புக் கணிப்பு அறிக்கைகள் |
| (ஆ) | Chemicals and glassware | 23,562,128 | |
| | | 23,873,402 | |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் | |
| 99 ஆம் பிரிவு | உயர் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான எத்தோற்றுவாய் மூலமேனும் பெறப்படும் சகல பணமும் பல்கலைக்கழக நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக பல்வேறு நிதியங்களின் கீழ் பெறுவனவுகளை முதலீடு செய்தமையால் மீளாய்வாண்டில் பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 1,853,970 ஆகும். இது அந்நிதியங்களில் செலவு வைக்கப்பட்டிருந்தபோதும், உடன்படிக்கை மீறிய பேராசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,558,095 உடன்படிக்கை மீறல் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | (i) நிதிப்பிரமாணங்கள் 570 மற்றும் 571 | பல்வேறு நிர்மாண வேலைகளுக்கான வழங்கல்களையும் சேவைகளையும் பெறும்போது நிறுத்தி வைத்திருந்த 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 13,346,065 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான பொருட் கணிப்புச் சபை அறிக்கை 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | • 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டினது வரைவு ஆண்டறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | • 7.2 ஆம் பந்தி | பிரதான செயற்பாட்டுத் துறைகளை உள்ளடக்கியவாறாக செயற்பாட்டுக் கைநூல்களை சகல அரச முயற்சி நிறுவனங்களும் வைத்திருக்க வேண்டும். எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் செயற்பாட்டுக் கைநூலைத் தயாரித்திருக்கவில்லை. |
| (ஈ) | 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/புஸ்/01 இலக்கமுடைய தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களில் பிரகாரம், ரூபா 64,220,660 பெறுமதியுடைய நூலகப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் சம்பந்தமான பொருட் கணிப்பு அறிக்கை 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (உ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் 456 பேருக்கு 2014 முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 62,496,364 ஆராய்ச்சிப் படியாக வழங்கப்பட்டிருந்தபோதும், 454 உத்தியோகத்தர்கள் பரிசீலனைக் குழுவிற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் X அத்தியாயத்தினது 1.6.1 ஆம் பிரிவு மற்றும் XX அத்தியாயத்தினது 3(1) ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் லீவு என்பன உறுதி செய்யப்படாது மீளாய்வாண்டில் சம்பளமும் படியுமாக ரூபா 267,383,227 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (எ) | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்<br>------------------------------------------ | |

| | | |
|---|---|---|
| (i) | 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 12/2013 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவரது நிறுவனச் சுற்றறிக்கை | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குரிய மனைகளில் 2014 தொடக்கம் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து சுற்றறிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மனைகளுக்கான வாடகை மீளாய்வாண்டு இறுதியிலும் அறவிடப்படாதிருந்தது. |
| (ii) | 2015 நவெம்பர் 07 ஆந் திகதிய 15/2015 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் நிறுவனரீதியான சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை முடிவடைந்து 03 மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டுமாயினும், முன்னைய ஆண்டில் நடைபெற்ற 6 பரீட்சைகள் மீளாய்வாண்டில் நடைபெற்ற 12 பரீட்சைகள் என்பவற்றினது பெறுபேறுகளை வெளியிடுவதில் 01 முதல் 05 மாத கால தாமதம் ஏற்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஏ) | சனாதிபதியின் செயலாளரது சீஎஸ்ஏ/2/3/4 ஆம் இலக்க 2006 பெப்பரவரி 26 ஆந் திகதிய கடிதம் மற்றும் 2012 யூன் 11 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/16 ஆம் இலக்க கடிதம் | உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் குறித்த வெளிநாட்டுப் பயணத்தால் இலங்கை அரசாங்கம் பெறும் நலன்களை உள்ளடக்கிய அறிக்கையை சுற்றுலா முடிவுற்று தீவுக்கு வந்த பின்னர் 2 வாரங்களுக்குள் சமர்பிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 3,905,523 செலவிடப்பட்டு வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் ஈடுபட்ட 14 பேராசிரியர்களும் ஒரு உத்தியோகத்தரும் அடங்கலாக உத்தியோகபூர்வ விடுமுறையில் வெளிநாடு சென்ற 07 பேராசிரியர்களும் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. |

### 2.4 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய பிர/ஆயதன/11 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம், கல்விசார் படி சீவனப்படியெனக் கருதப்பட முடியாததால் இப்படியை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குமான பங்களிப்புக்குரியதாகக் கருதலாகாதெனினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணமாக, மீளாய்வாண்டின்போது பல்கலைக்கழகத்தின் 04 பீடங்களில் உள்ள பதவியணியினருக்கு பங்களிப்பாக ரூபா 11,625,307 மேலே குறிப்பிடப்பட்ட நிதியத்திற்குக் கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 85,587,906 பற்றாக்குறையாகும். இதற்குகொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 80,933,886 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 4,654,020 நலிவு தென்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது வருமானம் ரூபா 194,841,268 அதிகரித்தபோதும், மொத்தச் செலவினம் ரூபா 199,495,287 அதிகரித்தமையால் நலிவு ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வுச் செய்கையில், 2013 ஆம் ஆண்டின் ரூபா 88,412,661 பற்றாக்குறையானது வருடாந்தம் மாற்றங்களுக்குள்ளாகி இருந்தது. 2017 ஆம் ஆண்டில் ரூபா 85,587,906 பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியத்தையும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானத்தையும் நிதிக் கூற்றுக்களில் மீண்டும் சீராக்கல் செய்யும்போது பல்கலைக்கழகத்தின் 2013 ஆம் ஆண்டினது பங்களிப்பு ரூபா 107,634,789 ஆகும். மீளாய்வாண்டில் அது ரூபா 363,834,406 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தாலும் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்

நெடுங்காலம் பணியாற்றிய 08 பயிற்சி பெறுபவர்களால் பல்கலைக்கழகத்துக்கு எதிராக 2014 யூலை 02 ஆந் திகதி வழக்கு தொடரப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 நடவடிக்கைகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 - 2020 காலப்பகுதிக்கென பல்கலைக்கழகம் தயாரித்திருந்த கூட்டிணைந்த திட்டத்தில் எய்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 06 நோக்கங்களும் இலக்குகளும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(i) 2016, 2017 ஆம் ஆண்டுகளில் 13 பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு 1,490 மாணாக்கரை ஆட்சேர்க்க வேண்டியபோதும், 1,249 மாணாக்கர் மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதற்கமைய, ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 241 மாணாக்கர் குறைவாக ஆட்சேர்க்கப்பட்டமையால் பல்கலைக்கழகம் மொத்த ஆற்றலையும் பயன்படுத்தத் தவறியிருந்தது.

(ii) பல்கலைக்கழகமானது 2010/2011 மற்றும் 2011/2012 கல்வி ஆண்டுக்கென ஆட்சேர்த்த மாணாக்கரது எண்ணிக்கை 998 ஆகும். பட்டம் பெற்று வெளியேறியோரது எண்ணிக்கை 860 ஆகும். அதற்கமைய, பட்டப்படிப்பை நிறைவேற்றாத மாணாக்கரின் எண்ணிக்கை மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட மாணாக்கரது எண்ணிக்கையில் 14 சதவீதமாகும்.

(iii) அதியுயர் தரத்திலான சர்வதேச மட்டத்திலமைந்த கற்கை நெறிகளைக் குறைந்த கிரயத்தில் அறிமுகஞ் செய்து வைப்பதன் மூலம் வெளிநாட்டு மாணாக்கரது எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வது நோக்கமாகவிருந்தபோதும், முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ஒரு வெளிநாட்டு மாணாக்கர் எனும் வீதத்திலேயே ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது.

(iv) 2014 ஆம் ஆண்டில் 77 சதவீதமாகவிருந்த சேவைப் பங்களிப்பை 2017 ஆம் ஆண்டின் 100 ஆக அதிகரித்துக் கொள்வது நிறுவனத்தின் நோக்கமானபோதும், 2011/2012 ஆம் கல்வி ஆண்டுடன் தொடர்புடையதாக மீளாய்வாண்டில் பட்டம் பெற்று வெளியேறியோரது சேவைப் பங்களிப்பு தொடர்பாக பல்கலைக்கழகம் மேற்கொண்ட புள்ளி விபரக் கணிப்புக்கு அமைய 62 முதல் 74 சதவீதம் வரையிலான சேவைப் பங்களிப்பு இருந்தது.

(ஆ) பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவால் 2013 முதல் 2016 வரை 33 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அதன் பொருட்டு ரூபா 37,520,707 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், 21 செயற்திட்டங்கள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டு அவற்றுள் 20 நிறைவடைந்திருந்தன. மொத்த நிதியேற்பாட்டில் 56 சதவீதமாகிய ரூபா 21,027,409 மீளாய்வாண்டின் இறுதியளவிலும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிறைவு செய்யப்பட்ட 20 செயற்திட்ட அறிக்கைகளது அடிப்படையில் புதிய ஆக்கங்கள் அல்லது சேவைகள் உருவாக்கப்பட்டு அவற்றிக்கான பேட்டன்ட் அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்குத் தேவையான விதி முறைகள் தயாரிக்கப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 முதல் 2017 வரையான காலப்பகுதியின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 593,799 பெறுமதியான 17 பொருட்கள் காலாவதியாகி இருந்தன. கணக்காய்வுத் தினமான 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் அக் கையிருப்பைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்காக கைத்தொழில் அமைச்சுக்குச் சொந்தமான காணியைக் கல்வி அமைச்சு சுவீகரிப்பதற்கான 2008 பெப்ரவரி 10 ஆந் திகதிய 05/0183/035/001 இலக்கமுடைய அமைச்சரவைக் குறிப்பின் மூலம் மேற்கொண்ட தீர்மானப்படி பல்கலைக்கழகத்துக்கென ஒதுக்கப்பட்ட 30.9667 ஹெக்டயார்

காணியின் உரித்தை இந்த அறிக்கைத் தினம் வரை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை பல்கலைக்கழகம் சட்டபூர்வமாக மேற்கொள்ளவில்லை.

(இ) பல்கலைக்கழக நிதிக்குழவின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது வெளிநாட்டுப் பயணங்களுக்கு ரூபா 3,247,475 செலவிடப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது பல்கலைக்கழகத்தால் விடுதி வசதி அளிக்கப்பட்ட 1,849 மாணாக்கரில் 841 மாணாக்கர் அல்லது 46 சதவீதமானோர் வாடகைக்கு பெறப்பட்ட விடுதிகளையே பயன்படுத்தியிருந்தனர் மீளாய்வாண்டின் இறுதியளவில் 506 மாணாக்கர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கக்கூடிய 04 விடுதிகள் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், விடுதி வசதிகளை வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் மனைகளைப் பெற்றதற்கு 2015 முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியின்போது ரூபா 21,638,235 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, பல்கலைக்கழகம் ஆரம்பமாகி ஏறக்குறைய 12 ஆண்டுகளாகியும் நிரந்தர விடுதிகளை அமைப்பதில் பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகம் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின்போது 14 வாகனங்களை வாடகை அடிப்படையில் பயன்படுத்தி அதன் பொருட்டு ரூபா 16,601,629 செலவிட்டிருந்தது. அவ்வாறே, கடந்த 04 ஆண்டுகளில் வாடகையாக ரூபா 65,055,751 வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழகம் ஆரம்பமாகி 12 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும், வருடாந்த வரவு, செலவுத்திட்டத்தின் மூலம் நிதியேற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் கைக்காசுக்கு அல்லது வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.4 குறைவான நிதியப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா கைத்தொழில் கேந்திர நிதியம், உப வேந்தர் நிதியம், நலன்புரி நிதியம் எனும் நிதியங்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,314,079 கூட்டுத் தொகையான மீதியிருந்ததுடன், ஆண்டின்போது அந்நிதியம் எதற்குமே பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது 2 அரச நிறுவனங்களிலிருந்தும் ஒரு செயற்திட்டத்திலிருந்தும் பல்கலைக்கழகத்தின் 02 கல்விப் பீடங்களுக்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கென கிடைக்கப் பெற்ற தொகை ரூபா 1,308,853 ஆகும். இதில் 20 சதவீதம் பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது.

## 4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் ரூபா 2,043,499 செலவிடப்பட்டு மாணாக்கரது கற்கை நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நோக்கத்துடன் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 2 சக்கர டிறெக்டர், 4 சக்கர டிறெக்டர், கலப்பை மற்றும்

துணைப்பாகங்கள் என்பனவும் ரூபா 6,270,760 செலவிடப்பட்டு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கற்கை மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பனவும் கணக்காய்வுத் தினமான 2018 யூன் 30 வரை அந்நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்தப்படாது இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் எப் பிரிவை இரு கூறாக்கி மறுசீரமைக்கும் செயற்திட்டம் ("Partition and other Improvements to Block F") 2017 செப்டெம்பர் 23 ஆந் திகதியன்று ரூபா 16,952,719 உடன்படிக்கைத் தொகையில் பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 06 இல் உள்ளவாறு நடைபெற்ற வேலைக்காக பணியகத்திற்கு ரூபா 15,619,407 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மின்சார விளக்குகள் பொருத்தப்படும் 34 இடங்களில் (Lamp Points) பயன்படுத்தப்பட முடியாதவாறு சீலிங் பொருத்தப்பட்டிருந்தமை 2018 மார்ச் 06 ஆந் திகதிய களப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, அதற்கெனச் செலவழித்த ரூபா 187,000 பயனற்ற செலவினமாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) பொருட்களைக் கொள்வனவு செய்கையில் தேவையையும் களஞ்சியத்தில் நிலவும் கையிருப்பு மட்டத்தையும் கவனத்திற் கொள்ளாமையால் 2015 மே 21 ஆந் திகதியன்றும் செப்டெம்பர் 11 ஆந் திகதியன்றும் கொள்வனவு செய்யப்பட்ட A3 வகை நிழற்பிரதிக் கடதாசிகளில் ரூபா 653,193 பெறுமதியான 710 பெக்கட் நிழற் பிரதிக்கடதாசிகள் கணக்காய்வுத் தினமான 2018 மே 31 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

(ஈ) கையிருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக ரூபா 165,000 செலவிடப்பட்டு 2016 நவெம்பர் 24 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென் அணிகள் 2017 டிசெம்பர் 31 திகதியளவிலும் கையிருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வாடகை வாகன வழங்குநர்களுடன் பல்கலைக்கழகம் ஈடுபட்ட உடன்படிக்கைப் பிரகாரம் வாடகை வாகன சாரதிகளுக்குத் தங்குமிட வசதி வழங்குவதற்கு இணங்காதபோதும், அச்சாரதிகளுக்குத் தங்குமிட வசதி வழங்குவதற்கென வீடு வாடகைக்குப் பெறப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் பல்கலைக்கழக நிதியத்திலிருந்த அதற்கென ரூபா 240,000 செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கல்விசார் பதவியணி

(i) 2006 ஆம் ஆண்டில் 10 ஆகவிருந்த பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பேராசிரியர் பதவி எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் 05 ஆகக் குறைக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் வெற்றிடமாக இருந்த அப்பதவிகளை நிரப்புவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ii) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர் பதவிகளில் பெருமளவு எண்ணிக்கை பல்கலைக்கழக ஆரம்பந்தொட்டே வெற்றிடமாக இருந்து வருவதுடன், 275 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 83 பதவிகளில் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடங்கள் நிலவின.

**(ஆ) நிர்வாக மற்றும் கல்விசாராப் பதவியணி**

(i) 2006 யூன் 06 ஆந் திகதிய 876 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினது சுற்றறிக்கைப் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மற்றும் கல்விசாரா பதவியணியில் 77 உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை.

(ii) பல்கலைக்கழத்தின் நூலகர் பதவி பல்கலைக்கழக ஆரம்பந்தொட்டே வெற்றிடமாக இருந்து வருவதுடன், 2017 யூலை 21 ஆந் திகதி நடைபெற்ற 123 ஆம் நிர்வாக மன்றக் கூட்டத்தினது அங்கீகாரத்துகமைய செபடிகல் விடுமுறையில் உள்ள ரஜரட்ட பல்கலைக்கழக நூலகர் 2017 ஆகஸ்ட் 01 முதல் 2018 யூலை 31 வரை ரூபா 150,000 படி வழங்கப்படும் அடிப்படையில் நூலகராக நியமிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து, 2017 டிசெம்பர் 22 ஆந் திகதிய 128 ஆம் நிர்வாக மன்றக் கூட்டத் தீர்மானத்துக்கமைய, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத நூலக மதியுரையாளர் பதவிக்கு அப்பெண் உத்தியோகத்தர் 2018 சனவரி 01 தொடக்கம் ரூபா 225,000 படியை பெறும் வண்ணம் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கமைய, நூலகர் பதவி வெற்றிடமாக இருக்க, அங்கீகரிக்கப்பட்ட பதவியைச் சேராத நூலக மதியுரையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது.

(iii) பல்கலைக்கழகத்தின் பொறியியலாளர் பதவி ஆரம்பம் முதலாக கணக்காய்வுத் தினமான 2018 யூன் 30 வரை வெற்றிடமாக இருந்தது. அப்பதவிக்கு ஊவா மாகாண சபை கட்டிடத் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளருக்கு 2015 டிசெம்பர் 02 ஆந் திகதி தொடக்கம் மாதாந்தம் ரூபா 50,000 படியைப் பெறும் அடிப்படையில் பகுதி நேர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) பல்கலைக்கழகம் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் 02 டிறக்டர்களையும் 2017 ஆம் ஆண்டின்போது 03 பஸ் வண்டிகளையும் கொள்வனவு செய்திருந்தபோதும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைச் சேர்ந்த நிரந்தர சாரதியை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பல்கலைக்கழக தொழில் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாளாந்தம் படி வழங்கப்படும் அடிப்படையில் 4 பேர் சாரதிகளாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்கையும் அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''2030 நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் பல்கலைக்கழகம் மீளாய்வாண்டில் தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக

எவ்வாறு செயலாற்றுவது என அறிந்திருந்தபோதும், நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்கையும் இனங்கண்டு நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியினது நோக்கங்களையும் இலக்குகளையும் அளவிடுவதற்கான சுட்டிக்காட்டியை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள்

#### 6.1.1 பொருட் கொள்வனவு

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டம் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருட் கொள்வனவு முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளர்யவாண்டிலும் அதற்கு முன்னரும் ஆரம்பிக்கப்பட்டு அமுலாக்கப்பட்ட ரூபா 114,811,098 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 72 பொருட்கொள்வனவு நடவடிக்கைகளை மீளாய்வாண்டினது பொருட் கொள்வனவுத் திட்டத்திலோ அல்லது திருத்தம் செய்யப்பட்ட பொருட்கொள்வனவுத் திட்டத்திலோ சேர்த்துக்கொண்டிராததுடன், அதில் ரூபா 87,184,465 பெறுமதியான 46 பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிறைவேறாதிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டிருந்த ரூபா 505,000,000 பெறுமதியான 134 பொருட் கொள்வனவுகளில் ரூபா 163,506,415 பெறுமதியான 39 பொருட் கொள்வனவுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### 6.1.2 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடுதிகளுக்காகவும் பதவியணியினர்க்காகவும் 75 மனைகளை வாடகைக்குப் பெறுவது தொடர்பாக 2016 செப்டெம்பர் 12 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பொருட் கொள்வனவு விளம்பரத்தின் 2.6 ஆம் நிபந்தனைப்படி அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட வாடகை மற்றும் சமர்ப்பிக்கப்படும் வாடகை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு கொடுப்பனவு செய்ய வேண்டிய வாடகையைத் தீர்மானிக்க வேண்டுமாயினும், வாடகைக்குப் பெறப்பட்ட 13 மனைகளுக்கு அரசாங்க மதிப்பிடப்பட்ட வாடகையிலும் கூடுதலாக மாதாந்தம் ரூபா 112,100 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. மேலும், அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட வாடகையைப் பெறாது 12 மனைகளுக்கு ரூபா 775,070 மாதாந்த வாடகை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்காது மாதாந்தம் ரூபா 681,282 வாடகையில் 15 மனைகள் 2017 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களிலும் விடுதிகளாக மாதாந்த வாடகை ரூபா 47,000 மற்றும் ரூபா 27,500 என 2 மனைகள் சுற்றுலா விடுதிகளாகப் பயன்படுத்தப்படுவதற்காக ஓராண்டு வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன.

(இ) விடுதிகள் மற்றும் உத்தியோகபூர்வ மனைகளுக்குத் தெரிவு மேற்கொள்ளப்படுகையில் அம்மனைகளது இணக்கச் சான்றிதழ் கவனத்திற்

கொள்ளப்பட்டிராததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்ட மனைகளில் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகளும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது ஒவ்வொன்றும் ரூபா 5,400,000 ஆக 2 பஸ் வண்டிகள் ரூபா 10,800,000 கொடுப்பனவு செய்யப்பட்டு தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து 2017 டிசெம்பர் 07 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொருட் கொள்வனவுக்கெனத் தயாரிக்கப்பட்ட மாதிரி வடிவமைப்புக்கு அமைய 2017 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பஸ் வண்டிகளைக் கொள்வனவு செய்ய வேண்டுமாயினும், 2016 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 2 பஸ் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பரிசோதகரின் பரிந்துரையின்படி மலைப்பாங்கான வீதிகளுக்கு தகுதி வாய்ந்த அலுமினியம் கட்டமைப்புடன் கூடிய 58 ஆசனங்களையும் 06 கியர்களையும் உடைய அலுமினியம் தட்டுக்களையுடைய பஸ் வண்டிகளில் கவனம் செலுத்தப்படாது பைபர் கலவை கட்டமைப்புடனான பஸ் வண்டிகள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தன.

(உ) பதவியணியினரின் உத்தியோகபூர்வ மனைகளுக்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் 2016 ஒக்டோபர் 14 ஆந் திகதி ஆரம்பமாகி கூறு விலைகள் கோரப்பட்டிருந்தபோதும், குறித்த காலப்பகுதியினுள் தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு பணியாற்றாமையால் மீளாய்வாண்டின்போது வீட்டுத் தளபாடக் கொள்வனவுக்கு ரூபா 589,500 மேலதிக கிரயம் மேற்கொள்ளப்பட வேண்டியேற்பட்டது.

(ஊ) 2006 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தை அமைக்கும் முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 350 மில்லியன் பெறுமதியான கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 05/0536/035 இலக்கமுடைய 2005 ஏப்ரல் 21 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்புத் தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டு, நிர்மாணப் பணி விதிமுறைகளுக்கேற்ப அதனை நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவால் பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்குப் புறம்பாக பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்துடன் உடன்படிக்கையில் ஈடுபடாது நிர்மாணிக்கப்பட்ட நிர்மாண விதிமுறைகளுக்கேற்ப நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் 2005 யூன் 09 முதல் 2005 டிசெம்பர் 31 வரை 05 சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவால் ரூபா 138,217,390 ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2006 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பல்கலைக்கழகமானது பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்துடன் நிர்மாணிக்கப்பட்ட நிர்மாண விதிமுறைகளுக்கு ஏற்ப நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு மொத்த வேலைப் பெறுமதியான ரூபா 284,273,405 உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன், உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு

முன்பு 2006 பெப்ரவரி 06 முதல் 2006 மே 31 வரை 05 சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகத்தால் பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்திறகு ரூபா 84,890,797 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மேற்படி ஒப்பந்தத்தை நிர்வகிக்கும் பொறுப்பைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்ததற்கான காரணத்தைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கவில்லை.

(iii) இந் நிர்மாண வேலை தொடர்பான 2005 ஏப்ரல் 21 ஆந் திகதிய 05/0536/035 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட நிர்மாண விதிமுறைகளுக்கமைய ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க, நிர்மாண வேலைக் கைத்தொழில் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட CIDA/SDB/04 இன் 14.1 (ஆ) பிரிவின் பிரகாரம் விலைச் சீராக்கலுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படலாகாதெனினும், அதற்கு முரணாக விலை வேறுபாடுகெளுக்கென ரூபா 28,427,341 ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்தக் கம்பனியால் தாமதத்திற்கான தண்டப் பணமாக ரூபா 2,250,000 அறவிடப்பட்டிருந்தபோதும், கணிப்பீடு தொடர்பான விபரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) 2006 ஆகஸ்ட் 21 ஆந் திகதியன்று பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 05 பிரிவுகளுக்கான வேலைக்கு ரூபா 284,273,405க்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும், 2015 நவெம்பர் 16 ஆந் திகதிய இறுதிக் கொடுப்பனவு அறிக்கையில் 06 பிரிவுகளுக்கான வேலைகளே உள்ளடக்கப்பட்டு உடன்படிக்கையில் உள்ளடங்காத வேலைப் பிரிவுகளுக்கும் ரூபா 44,123,115 ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 6.3 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் உள்ளவாறான வருமானத்துடன் கணக்கிணக்கஞ் செய்யப்படுகையில் 04 வருமான விடயங்களில் 15 முதல் 151 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட செலவினம் உள்ளவாறான செலவினத்துடன் கணக்கிணக்கஞ் செய்யப்படுகையில் 13 செலவின விடயங்களில் 20 முதல் 119 வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே, மூலதனச் செலவினத்தின் கீழ் காணிச் சுவீகரிப்புக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்கையில் இனங்காணப்படடிருக்கவில்லை. அதற்கமைய, வரவு, செலவுத் திட்டம் பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.4 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் முதலாம் பகுதியின் பிரகாரம் கழிவுப் பொருட்களை அழிப்பது அல்லது அகற்றுவது சம்பந்தமான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்று அதற்குரிய

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், பல்கலைக்கழக ஆய்வு கூடங்களில் பயன்படுத்தி பின்னர் அகற்றப்படும் இரசாயனப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு அவ்வாறான அனுமதிப்பத்திரத்தைப் பெற்று அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்குப் பதிலாக பல்கலைக்கழக வளாகத்தில் தயாரிக்கப்பட்ட குழியில் நீருடன் கலந்து அவை வெளியேற்றப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகத்தின் கடந்த 03 ஆண்டு கால நீர்ப் பாவனைக்கென ரூபா 13,537,151 செலவிடப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளும் வெளியேற்றும் அசுத்த நீர், கழிவு நீரை வடிகட்டும் முறைமை மூலம் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருந்தபோதும், இந்நீரை வாகனங்களைக் கழுவுவதற்கும் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தி நீருக்கான செலவினத்தைக் குறைப்பது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கீட்டுக் குறைபாடு மற்றும் கணக்குகள் கணக்கிணக்கஞ் செய்யப்படாதிருத்தல். |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்துக்களை மீளப் பெறுமதியிடாதிருத்தல், நிலையான சொத்துப் பதிவேட்டை முறையாகப் பராமரிக்காமை. |
| (இ) களஞ்சியக் கட்டுபாடு | நலிவான கையிருப்பு முகாமைத்துவம் |
| (ஈ) பதவியணி நிர்வாகம் | பதவி வெற்றிடங்களுடன் மேலதிக ஊழியர்கள் இருத்தல். |